**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.367/2021**
**Prosecution Witness :2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | சரத்குமார் | **Caste** | : | |
| **Father's Name** | : | வரதராஜன் | **Calling** | : | சார்பு ஆய்வாளர் |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | திண்டுக்கல் | **Age** | : | **35/2026** |
| | | | **Dated** | : | **09.03.2026** |

**09.03.2026**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

கூடுதல் சாட்சி **திரு. சரத்குமார்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா. 2** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**எதிரி ஆஜர்.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்துவருகிறேன். வழக்கின் புலன் விசாரணை அலுவலர் சார்பு ஆய்வாளர் முருகன் பணி ஓய்வு பெற்று வெளி மாவட்டம் சென்றுவிட்டதால் ஆவணங்களின் அடிப்படையில் அவரின் கையெழுத்து, கையொப்பம் நன்கு பரிட்சயம் என்பதால் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 26.09.2019ம் தேதி சார்பு ஆய்வாளர் முருகன் நிலைய பொறுப்பில் இருந்தபோது சிவகங்கை மலம்பட்டி, அழகு மகன் முருகன் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைப்பெற்று நிலைய குற்ற எண்.636/2019 சட்டப்பிரிவுகள் 387,506(2) இதச வாக முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்துள்ளார்.

வழக்கினை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 14.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சக்கரபாணி, ரவிக்குமார் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார். பின்பு சாட்சிகள் முருகன், தீபக், செல்வராஜ் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார். விசாரணையில் சம்பவம் உண்மையென தெரியவர எதிரிகளைத் தேடிவந்த நிலையில் 16.30 மணிக்கு திண்டுக்கல் நாகல் நகர், கனரா பேங்க் முன்பு நின்றுகொண்டிருந்த எதிரியை காரணம் கூறி கைது செய்து நிலையம் அழைத்துவந்து பாராவசம் ஒப்புவித்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். பின்பு சார்பு ஆய்வாளர் புலன்விசாரணை முடித்து எதிரி மீது 387, 506(2) இதசவின் கீழ் குற்ற இறுதிஅறிக்கை தாக்கல் செய்துள்ளார். **புகார் அ.சா.ஆ.2 ஆகவும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.3 ஆகவும் பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்டுகிறது.**

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் சொல்வது போல் அ.சா.1 புகார் ஏதும் கொடுக்கவில்லை என்றாலும் அவரிடம் வெள்ளைத்தாளில் கையொப்பம் மட்டும் பெற்றுக்கொண்டு வழக்கிற்கு ஏற்றாற்போல் முதல் தகவல் அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளை சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் கைது செய்யவில்லை என்றும் சாட்சிகளை சரிவர விசாரிக்காமல் எதிரி மீது தவறாக குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. புள்ளியியல் கணக்கிற்காக எதிரி மீது தவறாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.03.09 13:49:01 +0530

Judicial Magistrate No.II
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.367/2021**

**Prosecution Witness :1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : முருகன் | | **Caste** | : | |
| **Father's Name** | : அழகு | | **Calling** | : | தனியார் பார் வேலை |
| **Village** | : மலம்பட்டி | | **Religion** | : | |
| **Taluk** | : சிவகங்கை | | **Age** | : | **44/2026** |
| | | | **Dated** | : | **09.03.2026** |

**09.03.2026**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி 1 **திரு. முருகன்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா. 1** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**எதிரி ஆஜர்.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது சிவகங்கை மாவட்டம் மலம்பட்டியில் குடியிருந்து தனியார் பார் ல் கூலி வேலை செய்துவருகிறேன். கடந்த 2019ம் வருடம் சொந்த வேலை காரணமாக திண்டுக்கல் வந்தபோது பேருந்துநிலையத்தில் இருவர் சண்டையிட்டு கொண்டிருந்தார்கள். அப்போது அங்கு வந்த போலிசார் எனது பெயர் முகவரி கேட்டு கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் மட்டும் என்னுடையது. புகாரில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்ட்டுகிறது. வழக்குப்பற்றி தெரியாது. ஆஜர் எதிரியைத் தெரியாது.

**<u>அரசு தரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக கருதக்கோரி அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

கடந்த 26.09.2019ம் தேதி திண்டுக்கலில் தங்கி கூலி வேலை செய்துவந்தபோது அன்றைய தினம் மதியம் 01.00 மணிக்கு ஈஸ்வரி லாட்ஜ் எதிரே நின்றுகொண்டிருந்தபோது ஆஜர் எதிரி என்னிடம் வந்து தான் இந்த பகுதியின் ரவுடி என்றும் மது குடிக்க ரூ.500/- பணம் கொடு என்று மிரட்டினார். நான் மறுக்கவே மறைத்துவைத்திருந்த கத்தியை எடுத்து பணம் கொடுக்கவில்லை என்றால் குத்தி கொன்றுவிடுவதாக மிரட்டல் விடுத்தார். நான் சத்தம் போடவே அருகில் இருந்தவர்கள் வரவும் அங்கிருந்து எதிரி ஓடிவிட்டார் என்றும் நடந்த சம்பவத்திற்காக காவல் நிலையம் சென்று புகார் அளித்தாக போலிசார் விசாரணையில் தெரிவித்துவிட்டு தற்சமயம் நீதிமன்றத்தில் எதிரிக்கு ஆதரவாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.03.09 13:49:09 +0530

Judicial Magistrate No.II
Dindigul.